மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாயம், சிவகங்கை

முன்னிலை : திரு.வா.சுந்தரராஜ், எம்.எல்.,

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி/தலைமை

குற்றவியல் நீதித்துறை நடுவர், சிவகங்கை.

2024–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 04–ம் நாள் வியாழக்கிழமை

**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண்.53/2022**

CNR No.TNSV02-007051-2023

---------

ப.ஹரிபாண்டியன். ...மனுதாரார்

/எதிர்/

1. ஜோஸ்வா டேனியல்ராஜ்.
2. பீட்டர் அலங்கார தம்புராஜ். ... எதிர்மனுதாரார்கள்

இந்த மனு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அங்கு மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண்.103/2022 எண்ணிடப்பட்டு, இந்த நீதிமன்றத்திற்கு (Committal) மாறுதல் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தில் மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண்.53/2022 என எண்ணிடப்பட்டது. இம்மனு என் முன்பாக 20.03.2023–ம் தேதியன்று இறுதியான விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/கோருரிமையாளர் தரப்பில் வழக்குரைஞர் திரு.N.இராமலிங்கம், அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.கண்ணன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கலாகும்.....

**உ த் த ர வு**

கோருரிமையாளர் கோரியுள்ன இழப்பீட்டு தொகையான ரூ.5,00,000/–த்தினை மனு தாக்கல் செய்த நாள் முதல் உரிய வட்டியுடன் 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள் செலுத்தும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் கோருரிமையாளர் தரப்பில் பிரிவுகள் 140, 141, 142. 163B. 166 மற்றும் 182A M.V Act 1988 r/w Rule 3(1) of the M.A.C.T.Rule. For Amendment Act 54/1994- ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) கோருரிமையாளர் தரப்பு மனுவின் சுருக்கம் :–**

கோருரிமையாளர் விபத்திற்கு முன்னர் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், திடகாத்திரமாகவும் வாழ்ந்து வந்தார் என்றும், இந்த விபத்தானது கடந்த 23.06.2021–ந் தேதி காலை சுமார் 10.15 மணியளவில் சிவகங்கையிலிருந்து பரமக்குடி ஓய்வூதிய அலுவலகத்திற்கு தனது தந்தைக்கு சொந்தமான பதிவு எண். TN 65 V 9706 என்ற இரு சக்கர வாகனத்தை மனுதாரர் ஓட்ட அவருக்கு பின்னால் அவரது தந்தை பன்னீர்செல்வம் அமர்ந்து இளையான்குடி – பரமக்குடி மெயின் ரோட்டில் குமாரக்குறிச்சி ரைஸ்மில் அருகே ரோட்டின் இடது புறமாக செல்லும்போது அவர்களுக்கு எதிரே, அதே ரோட்டில் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தாலுகா குணப்பனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த பீட்டர் அலங்கார தம்புராஜ் மகன் ஜோஸ்வா டேனியல் ராஜ் என்பவர் அவரது தந்தைக்கு சொந்தமான பதிவு எண்.TN 63 K 6484 பஜாஜ் டிஸ்கவர் என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து கோருரிமையாளரின் வாகனத்தின் மீது மோதியாதால் மனுதாரர் கீழே விழுந்து அவருக்கு இடது முழங்கால், இடது கால் பாதத்தில் ரத்தக்காயம் ஏற்பட்டுள்ளது. கோருரிமையாளர் தனது தந்தை மற்றும் அருகில் இருந்தவர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் பரமக்குடி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சைக்கு அனுமதித்து, மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதித்தும், பின்னர் தொடர் மேல்

சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்றும் அதில் குணமடையாமல் தனியார் மருத்தவமனையிலும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

மேற்படி விபத்து சம்மந்தமாக கோருரிமையாளரின் தந்தை பன்னீர்செல்வம் என்பவர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் மனுதாரருக்கு உதவியாக இருந்தபோது இளையான்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களிடம் புகார் மனு கொடுத்து, அதுவும் நிலுவையில் இருந்து வருகிறது. காயம்பட்ட நபர் விபத்திற்கு முன்னர் சிவகங்கையில் உள்ள MRF டயர் கடையில் தொழிலாளராக பணியாற்றியதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.350 வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.10,500/- க்கும் குறையாமல் சம்பாத்தியம் ஈட்டி வந்தார். கோருரிமையாளரின் குடும்பமானது அவரது வருமானத்தை மட்டுமே வைத்துக்கொண்டு இயங்கி வருகிறது. தற்போது கோருரிமையாளரின் தாய், தந்தையார்கள் மிகவும் வறுமையாக சூழ்நிலையில் குடும்ப வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இந்த விபத்தானது பதிவு எண்.TN 63 K 6484 பஜாஜ் டிஸ்கவர் என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1வது எதிர்மனுதாரான ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நிகழ்ந்துள்ளது. 2-வது எதிர்மனுதாரர் தான் மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளர்.

தாவா விபத்து பதிவு எண்.TN 63 K 6484 என்ற பதிவு எண்ணுள்ள பஜாஜ் டிஸ்கவர் என்ற காரினை அதன் ஓட்டுநர் விபத்து சமயத்தில் அதிக வேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்றதால் நிகழ்ந்ததாகும். தாவா விபத்து குறித்து மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் மீது இளையன்குடி காவல்நிலையத்தில் குற்ற எண்.301/2021 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே கோருரிமையாளர் கோரும் இழப்பீட்டு வலி, துன்பம், மருத்துவச்செலவு, வருமான இழப்பு, நிரந்தர இழப்பு, வருங்கால வருமான இழப்பு போன்றவற்றிக்கு ரூ.1,26,000/-தை 1, 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் கொடுக்க கடமைப்பட்டவர்கள்.

**3)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில்

1. TN 63 K 6484 என்ற இருசக்கர வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து கோருரிமையாளர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனமான TN 65 V 9706 மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளாரா?

2.கோருரிமையாளருக்கு இழப்பீட்டுதொகை 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரரிகளிடமிருந்து கிடைக்கத்தக்கதா?

3. கோருரிமையாளர் பெறும் இழப்பீட்டு தொகை எவ்வளவு?

**4)** இம்மனுவில் கோருரிமையாளர் தரப்பில், ம.சா.1 முதல் ம.சா.3 வரை சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 மற்றும் நீ.ம.சா.ஆ.1, மற்றும் சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

**5)** இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

**6) பிரச்சினை எண்.1.**

கோருரிமையாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N,ராமலிங்கம், தங்களது வாதுரையில் கடந்த 23.06.2021–ந் தேதி காலை சுமார் 10.15 மணியளவில் சிவகங்கையிலிருந்து பரமக்குடி ஓய்வூதிய அலுவலகத்திற்கு தனது தந்தைக்கு சொந்தமான பதிவு எண். TN 65 V 9706 என்ற இரு சக்கர வாகனத்தை மனுதாரர் ஓட்ட அவருக்கு பின்னால் அவரது தந்தை பன்னீர்செல்வம் அமர்ந்து இளையான்குடி – பரமக்குடி மெயின் ரோட்டில் குமாரக்குறிச்சி ரைஸ்மில் அருகே ரோட்டின் இடது புறமாக செல்லும்போது அவர்களுக்கு எதிரே, அதே ரோட்டில் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தாலுகா குணப்பனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த பீட்டர் அலங்கார தம்புராஜ் மகன் ஜோஸ்வா டேனியல் ராஜ் என்பவர் அவரது தந்தைக்கு சொந்தமான பதிவு எண்.TN 63 K 6484 பஜாஜ் டிஸ்கவர் என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி

வந்து கோருரிமையாளரின் வாகனத்தின் மீது மோதியாதால் மனுதாரர் கீழே விழுந்து அவருக்கு இடது முழங்கால், இடது கால் பாதத்தில் ரத்தக்காயம் ஏற்பட்டுள்ளது. கோருரிமையாளர் தனது தந்தை மற்றும் அருகில் இருந்தவர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் பரமக்குடி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சைக்கு அனுமதித்து, மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதித்தும், பின்னர் தொடர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்றும் அதில் குணமடையாமல் தனியார் மருத்தவமனையிலும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

மேற்படி விபத்து சம்மந்தமாக கோருரிமையாளரின் தந்தை பன்னீர்செல்வம் என்பவர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் மனுதாரருக்கு உதவியாக இருந்தபோது இளையான்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களிடம் புகார் மனு கொடுத்து இளையான்குடி காவல்நிலைய குற்ற எண்.301/2021 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தானது பதிவு எண்.TN 63 K 6484 பஜாஜ் டிஸ்கவர் என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1வது எதிர்மனுதாரான ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நிகழ்ந்துள்ளது. 2-வது எதிர்மனுதாரர் தான் மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளர்.

மேலும் மருத்தவக்குழுவினர் கோருரிமையாளருக்கு ஏற்பட்ட ஊனம் 30 % நிரந்தர ஊனம் என கணித்து சான்றிதழ் வழங்கியுள்ளார். மேற்படி சம்பவத்தின் மூலம் ஏற்பட்ட காயத்தினால் கோருரிமையாளருக்கு ஊனம் ஏற்பட்டு எவ்வித வேலையும் செய்ய முடியாமல் இருந்து வருகிறார். எனவே கோருரிமையாளர் மேற்படி காயங்களுக்கு இழப்பிட்டு கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். கற்றறிந்த கோருரிமையாளர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் கோருரிமையாளர் மனுவில் கோரியுள்ளவாறு நிரூபித்து உள்ளதாகவும் மனுவை அனுமதிக்கும் படி வாதிட்டார்.

7) இந்த தீர்ப்பாயம் சாட்சிகளையும், சான்றாவணங்களையும் ஆராயும்போது அதிலும் குறிப்பாக ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை (நகல்) மற்றும் ம.சா.1 சாட்சியத்தையும் ஆராயும்போது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் பதிவு எண்.TN 63 K 6484 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது. ம.சா.1 சாட்சியம், ம.சா.ஆ.1 எதிர்த்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கண்ணுற்ற சாட்சிகள் எவரையும் விசாரிக்கவில்லை. எனவே ஷை விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் தான் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏறப்பட்டது என்று இந்த பிரச்சினைக்கு முடிவு காணப்படுகிறது.

**8) பிரச்சினை எண்.2:**

மேலே கண்ட முடிவின் படி பதிவு எண். TN 63 K 6484 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரே விபத்திற்கு காரணம் என்பதால் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் 1ம் எதிரிமனுதாரர், மேற்படி வாகனத்தின் உரிமையாளரான 2ம் எதிர்மனுதாரர் தான் பொறுப்பாவார். எனவே எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என தீர்வு காணப்படுகிறது.

**9) பிரச்சினை எண்.3:**

கோருரிமையாளர் இம்மனுவின் மூலம் எவ்வளவு தொகை இழப்பீடு பெறத் தகுதியுடையவர் என்று ஆராய வேண்டியுள்ளது. கோருரிமையாளர் சா.சா.ஆ.2 ஆவணத்தின்படி மதுரையில் உள்ள அரசு மருத்துவமனையில் 23.06.2021 முதல் 26.07.2021–ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மேற்படி மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சையின்படி கோருரிமையாளரின் இடது கால் பாதத்தில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேற்படி சிகிச்சையானது கோருரிமையாளர் மதுரை, அரசு மருத்துவமனையில் எடுத்து கொண்டதால் மருத்துவ செலவு ஏற்படவாய்பில்லை.

**10)** கோருரிமையாளர் விபத்திற்கு முன்பு சிவகங்கையில் உள்ள MRF டயர் கடையில் தொழிலாளராக பணியாற்றியதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.350 வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.10,500/−த்திற்கு மேல் சம்பாதித்து தனது குடும்பத்தினரை நல்லமுறையில் பராமரித்து வந்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் அதற்கான எவ்வித சாட்சியங்கலும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் கோருரிமையாளர் சா.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் 23.06.2021 முதல் 26.07.2021−ம் வரை உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுள்ளார். இந்நிலையில் மேற்படி காலகட்டத்தில் கோருரிமையாளருக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. விபத்தானது 2021ம் ஆண்டு நடந்துள்ளது. Syed Sadiq /vs/ United India Insurance Company Limited 2014(1) TNMAC 459 என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி 2008ம் ஆண்டு காய்கறி வியாபாரிக்கு National Income ரூ.6,500/− ஆக எடுத்துக்கொள்ளப்பட்டு மாத National Income நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்த விபத்தானது 2018 ஆண்டு நடந்துள்ளதால் பணவீக்க குறியீடு அடிப்படையில் கோருரிமையாளருக்கு மாத இழப்பீடு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுறது.

(Notional income fixed by the Hon'ble supreme court of India for vegetable vendor during the year 2007-2008) Rs.6500 x 317 (cost of inflation index for the year 2021-2022)

-------------------------------- = **Rs.15,972/-.**

129 (cost of inflation index for the year 2007-2008)

கோருரிமையாளரின் மாத வருமானம் ரூ.15,972/− நிர்ணயம் செய்யப்பட்டு அவர் மருத்துவமனையில் உள்ள காலங்களில் 2 மாதங்களுக்கு அவருக்கு ஏற்பட்ட வருமான இழப்பீடு ரூ.15,972/− X 2 = ரூ.31,944/−ஐ அவர் பெற தகுதியுடையவர் என தீர்வு காணப்படுகிறது.

**11)** மேற்படி விபத்தின் காரணமாக கோருரிமையாளரின் வேலையை இழந்துள்ளார் என்று கோருரிமையாளர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது. ஆனால் அதற்கான சாட்சி சான்றாவணங்களை முன்னிலை

படுத்தவில்லை. மேலும் மேற்படி விபத்தில் கோருரிமையாளருக்கு கொடுங்காயம் ஏற்பட்டு மருத்துவக்குழு முன் ஆஜராகி மருத்துவக் குழு வழங்கியுள்ள ஊனச்சான்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மனுதாரருக்கு 30% நிரந்தர ஊனம் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. விபத்தானது 2021–ம் ஆண்டு நடந்துள்ளது.

12) மேற்படி விபத்தினால் கோருரிமையாளருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டதாகவோ அல்லது அவர் ஏற்கனவே பார்த்து வந்த வேலை பறிபோய்விட்டதாகவோ எவ்வித சாட்சி மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப் படுத்தபடவில்லை. அவருக்கு ஏற்பட்ட நிரந்தர ஊனம் சதவீதத்தின் (%) முறைப்படி தீர்மானிக்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. அதன்படி "New India Assurance Company Limited /Vs/ R.Ramesh 2021(1) TNMAC 481-ன் படி 2019–ம் ஆண்டு நடந்த விபத்திற்கு சதவிகித முறை ஊனத்தின்படி ரூ.5,000/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் பத்தி 14–ல் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

> “ **14.**It is the case of the claimant that he suffered injuries and has taken treatment as inpatient at KMCH, Coimbatore in two different spells viz., from 16.04.2018 to 19.04.2018 and from 08.05.2018 to 16.05.2018 and he underwent surgery. He was referred to the Medical Board. The Medical Board examined the claimant and certified that he suffered 60% disability. The claimant examined the Doctor who treated him as P.W.2, to prove the injuries and disability suffered by him. The Tribunal considering the evidence of claimant as P.W.1, evidence of Doctor as P.W.2 and admission of claimant that he is continuing his work and there is no loss of income or loss of earning capacity, awarded compensation by adopting percentage method.

In view of no loss of earning power, the claimant is not entitled to compensation by adopting multiplier method and the percentage method adopted by the Tribunal is in order. The Tribunal awarded a sum of Rs.1,80,000/- towards disability at the rate of Rs.3,000/- per percentage for 60% disability. This Court by the judgment reported in 2020 (1) TN MAC 617 **[M. Chinnathambi Vs. S.Deepa and another],** fixed a sum of Rs.4,000/- per percentage of disability for the accident occurred in the year 2014 & 2015 and a sum of Rs.5,000/- per percentage of disability for the accident occurred from the year 2016 onwards, due to raise in cost of living. In the present case, the accident is of the year 2018. In view of the same, a sum of Rs.5,000/- is awarded per percentage of disability. Hence, the amount awarded by the Tribunal towards disability is enhanced to Rs.3,00,000/- [Rs.5,000/- x 60%], at the rate of Rs.5,000/- per percentage for 60% disability. Considering the nature of injuries and treatment taken, the meager amounts granted by the Tribunal towards attendant charges and extra nourishment are enhanced to Rs.20,000/- each. The Tribunal has not granted any amount for loss of amenities. For the injuries sustained in the accident, the claimant would have suffered inconvenience. Hence, a sum of Rs.30,000/- is awarded towards loss of amenities."

எனவே மேற்படி தீர்ப்பின்படி மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்திற்கு ரூ.5,000/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. 30% ஊனத்திற்கு தலா ரூ.5,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு 30 X 5.000/- = **ரூ.1,50,000/-** என ஊன இழப்பீடு வழங்கலாம் என முடிவு செய்யப்படுகிறது. மேற்படி

தீர்ப்பின்படி, கோருரிமையாளருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களினால் வசதி குறைவு ஏற்பட்டுள்ளது. எனவே, ரூ.30,000/– வசதி குறைவுக்காக (Loss of Amenities) வழங்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

**13)** மனுதாரர் கடந்த 23.06.2021 தேதி விபத்து ஏற்பட்டு அன்று மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 23.06.2021 முதல் 26.07.2021–ம் தேதி வரை மதுரை, அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததாகவும், கோருரிமையாளருக்கு இடது கால் பாதத்தில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. எனவே கோருரிமையாளருக்கு விபத்தின் காரணமாக காயங்கள் ஏற்பட்டுள்ளது என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மேற்படி காயங்கள் காரணமாக கோருரிமையாளருக்கு வலி துன்பம் ஏற்பட்ட வகையில் ரூ.50,000/– வழங்கலாம் என தீர்மானிக்கப்படுகிறது. மேலும் மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களில் கூடுதல் சத்துணவுக்காக ரூ.10,000/–மும், பராமரிப்பு செலவிற்காக ரூ.10,000/–மும், போக்குவரத்து செலவாக ரூ.5,000/–மும் வழங்கலாம் என தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**14)** மேற்படி கணக்குகளின் படி மொத்த இழப்பீடாக கீழ்க்கணடவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| (1) | வருமான இழப்பு (2 மாதம்) | ரூ. | 31,944/– |
| (2) | ஊன இழப்பீடு (30 X 5.000/-) | ரூ. | 1,50,000/– |
| (3) | விலிக்கும் துன்பத்திற்குமான இழப்பீடு | ரூ. | 50,000/– |
| (4) | சத்துணவு செலவு | ரூ. | 10,000/– |
| (5) | பராமரிப்பு செலவு | ரூ. | 10,000/– |
| (6) | போக்குவரத்து செலவு | ரூ. | 5,000/– |
| (7) | வசதி குறைவுக்காக | ரூ. | 30,000/– |
| | **மொத்தம்** | **ரூ.** | **2,86,944/–** |

**15)** இறுதியில் மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

(1) மனுதாரருக்கு 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ இழப்பீட்டுத் தொகையாக ரூ.**2,86,944**/– கோப்பிற்கு எடுத்த நாளிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கலெக்ட்ரேட் கிளை, சிவகங்கை சேமிப்பு கணக்கு எண்.42765590133 என்ற முகவரிக்கு இ–மாறுதல் மூலம் வைப்பீடு செய்து நீதிமன்ற Email ID. svg.cjm-tn@indiancourts.nic.in -என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

(2) மேற்படி முழுத்தொகையை வட்டி, செலவுத்தொகையுடன் எம்.சி.ஓ.பி.எண்.53/2022 தீர்ப்பாயத்தின் பெயரில் செலுத்தியவுடன் மனுதாரர் பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

(3) மனுதாரர் செலுத்தவேண்டிய மீதி நிதிமன்றக் கட்டணமான ரூ.1,869/–ஐ ஒருமாத காலத்திற்குள் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

(4) வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,238/–.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மோட்டார் வாகன விபத்துக்
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி/
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சிவகங்கை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி :</u>**

ம.சா.1 – ஹரிபாண்டியன் (மனுதாரர்)

ம.சா.2 – பிச்சைமணி

ம.சா.3 – பன்னீர்செல்வம்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

1. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை நகல்
2. ம.சா.ஆ.2 மனுதாரரின் வங்கி பாஸ்புக் நகல்
3. ம.சா.ஆ.3 மனுதாரரின் ஆதார் அட்டை நகல்

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:</u>**

1. சா.சா.ஆ.1 அதிகார கடிதம்
2. சா.சா.ஆ.2 மருத்துவ குறிப்பேடு

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்:</u>**

1. நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழ் (மனுதாரர்)

**<u>1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

இல்லை

V SUNDARARAJ Digitally signed by V SUNDARARAJ Date: 2024.04.04 03:23:11 -0800

மோட்டார் வாகன விபத்துக்
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி/
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சிவகங்கை.

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை
தீர்ப்பாயம் / தலைமை குற்றவியல்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
சிவகங்கை.

மோ.வா.வி.கோ.மனு எண்.53/2022
**சீரான உத்தரவு**
நாள் : 04.04.2024